செ.வெ.எண்: 13/மார்ச் நாள்: 06.03.2016

# இராமநாதபுரம் மாவட்டம்

## தேர்தல் நடத்தை விதிமுறைகள் நடைமுறைபடுத்தப்பட்ட பின்னர் பெயர் பலகை அமைக்கப்பட்டுள்ளதாக வந்த புகாரைத் தொடர்ந்து

## மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் ச.நடராஜன், இ.ஆ.ப., அவர்களின் உடனடி நடவடிக்கை

----------

இராமநாதபுரம் மாவட்டம், திருவாடனை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட, இராமநாதபுரம் வட்டம், பட்டணம்காத்தான் ஊராட்சி, டி-பிளாக் அரசு அலுவலர் குடியிருப்பு பகுதியில் அமைந்துள்ள பூங்காவின் நுழைவு தோரண வாயிலில், தேர்தல் நடத்தை விதிமுறைகள் நடைமுறைபடுத்தப்பட்ட பின்னர் வண்ண விளக்குகளுடன் கூடிய பெயர் பலகை அமைக்கப்பட்டுள்ளதாக மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்களுக்கு 05.03.2016 அன்று புகார் வந்ததைத் தொடர்ந்து, உடனடியாக மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்களின் உத்தரவின்படி 05.03.2016 அன்றே அரசு அலுவலர்கள் நேரில் சென்று ஆய்வு செய்து பூங்காவின் நுழைவு தோரண வாயிலில் உள்ள பெயர் பலகையினை மறைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், இது தொடர்பாக கேணிக்கரை காவல் நிலையத்தில் புகார் தெரிவிக்கப்பட்டு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேற்கண்ட தகவலை மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் ச.நடராஜன் அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**